**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Guru–Shishya Relationship and Teaching Techniques in Traditional Education: Guru Qualities, Student Traits, and a Contemporary Study

**Ms. Himarthika Thulasithasan*,**
Temporary Assistant Lecturer in Bharathanatyam, Department of Dance, Drama & Theater, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
*Correspondence: himahimarthi1031@gmail.com. Tel: 0094711948411

**Article Info**
Received on 20-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 25-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*This study explores the Guru–Shishya relationship and teaching techniques in traditional education, focusing on the characteristics and responsibilities of the Guru and the traits of the student (Shishya). The research highlights the pedagogical methods employed by Gurus, including direct instruction, experiential learning, art-based guidance (with a focus on Bharatanatyam), Socratic questioning, and individualized mentorship. The study further examines the socio-cultural dimensions of this relationship, emphasizing how the Guru's guidance influences the intellectual, ethical, spiritual, and artistic development of the student. Drawing on classical texts, Bharatanatyam educational treatises, and contemporary educational research, the study illustrates the enduring relevance of the Guru–Shishya tradition in fostering holistic development and preserving cultural heritage. Overall, this research demonstrates that the Guru–Shishya relationship serves as a foundational pedagogical model, integrating knowledge transmission, moral and ethical guidance, cultural continuity, and student development within a social and educational context.*

***KEYWORDS:*** *Guru–Shishya Relationship, Traditional Education, Teaching Techniques, Guru Qualities, Student Traits, Contemporary Study.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in)
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# பாரம்பரிய கல்வியில் குரு–சிஷ்ய உறவு மற்றும் கற்பித்தல் தந்திரங்கள்: குருவின் பண்புகள், சிஷ்ய லட்சணங்கள் மற்றும் சமகால ஆய்வு

**செல்வி. ஹிமார்த்திகா துளசிதாஸன்,** தற்காலிக உதவி விரிவுரையாளர் (நடன, நாடகத்துறை), சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வு பாரம்பரிய கல்வியில் குரு–சிஷ்யரின் உறவு மற்றும் கற்பித்தல் தந்திரங்களின் பண்புகள் மற்றும் செயல்பாடுகளை விரிவாக ஆராய்கிறது. குருவின் பண்புகள், அவருடைய கடமைகள் மற்றும் மாணவர் (சிஷ்யர்) இலட்சணங்கள் ஆகியவை பாரம்பரியக் கல்வியின் அடிப்படையைக் குறிக்கும் முக்கிய அம்சங்களாக கருதப்படுகின்றன. மேலும், பரதநாட்டியம் போன்ற பாரம்பரிய கலைக்கூடல் கல்வியியல் முறைகளில் குருவின் வழிகாட்டல், கற்பித்தல் தந்திரங்கள் மற்றும் சிஷ்யர் வளர்ச்சி இடையே உள்ள தொடர்புகள் சமூக–கல்வியியல் பரிமாணங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. ஆய்வு முதன்மையாக பண்டைய கல்வி நூல்கள், திரைக்கலைச் சாஸ்திரங்கள் மற்றும் சமகால கல்வியியல் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குரு–சிஷ்ய உறவு அறிவு பரிமாற்றத்திற்கும், பண்பாட்டுப் பாதுகாப்புக்கும், மற்றும் மாணவர் முழுமையான வளர்ச்சிக்கும் முக்கியமான பங்கு வகிப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. இத்துடன், பாரம்பரியக் கல்வியின் மரபும், கற்பித்தல முறைகளும், குரு–சிஷ்ய உறவின் பண்புகள் மற்றும் சமகால பயன்பாடும் தெளிவாக அறியப்படுகிறது.

**திறவுச்சொற்கள் :-** குரு–சிஷ்யர் உறவு, பாரம்பரிய கல்வி, கற்பித்தல் தந்திரங்கள், குருவின் பண்புகள், சிஷ்ய லட்சணங்கள்

**ஆய்வின் நோக்கம்**

இந்த ஆய்வின் முதன்மை நோக்கம், பாரம்பரிய நாட்டியக் கல்வியில் குரு–சிஷ்ய மரபின் கல்வியியல் கட்டமைப்பை மறுவடிவமைத்து, குரு லட்சணம், சிஷ்ய லட்சணப் பிரிவுகள், கற்பித்தல் தந்திரங்கள் மற்றும் கலைப் பயிற்சி முறைகளை ஒருங்கிணைந்த ஆடலாக்க மாதிரியாக உருவாக்குவதாகும். இம்மாதிரியின் மூலம், சமகால நாட்டியக் கல்வி நடைமுறைகளுக்கு ஒரு தரநிலையான கல்வியியல் வழிகாட்டுதலை வழங்குதல் இவ்வாய்வின் பிரதான இலக்காகும்.

**முக்கிய நோக்கம்**

1. நாட்டியக் கல்வியில் குருவின் அடிப்படை லட்சணங்கள் மற்றும் அவசியங்களை



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

அடையாளம் காணுதல்.

2. சிஷ்ய லட்சணங்களின் பிரிவுகளை வகைப்படுத்தி, அவற்றின் கல்வியியல் முக்கியத்துவத்தை விளக்குதல்.
3. குருவின்றி மேற்கொள்ளப்படும் கற்றல் தந்திரங்களின் பயன்தன்மை மற்றும் வரம்புகளை ஆராய்தல்.
4. குரு–சிஷ்ய உறவின் உளவியல், சமூக மற்றும் கல்வியியல் பரிமாணங்களை பகுப்பாய்வு செய்தல்.
5. நாட்டியக் கல்விக்கான ஒரு கருத்தாக்க ஆடலாக்க மாதிரி உருவாக்குதல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இவ்வாய்வு, பாரம்பரிய குரு–சிஷ்ய மரபை ஒரு பண்பாட்டு நடைமுறையாக மட்டும் அல்லாமல், ஒரு அறிவியல் மற்றும் கல்வியியல் கட்டமைப்பாக மறுவடிவமைத்து, சமகால நாட்டியக் கல்விக்கான ஒருங்கிணைந்த ஆர்டலாக்க மாதிரியாக முன்வைப்பதில் தனித்துவம் பெறுகிறது.

நவீன கல்வி அமைப்புகளில், நாட்டியப் பயிற்சி பெரும்பாலும் சான்றிதழ் நோக்கிய, குறுகிய கால மற்றும் செயல்திறன் மையப்பட்ட கற்பித்தல் முறைகளுக்குள் சுருங்கி வருகின்றது. இதனால், குரு–சிஷ்ய உறவின் நெறிமுறை, உளவியல், சமூக மற்றும் பண்பாட்டு பரிமாணங்கள் போதிய அளவில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இச்சூழலில், இவ்வாய்வு, நாட்டியக் கல்வியின் பாரம்பரிய அடித்தளத்தையும் நவீன கல்வியியல் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்து, ஒரு நிலையான கல்வி மாதிரியை முன்வைக்கிறது.

இதன் மூலம்:

- நாட்டிய ஆசிரியர் பயிற்சி திட்டங்களின் தரத்தை மேம்படுத்தும்.
- பாடத்திட்டவடிவமைப்பு, கற்பித்தல் தந்திரங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைகளில் அறிவியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்தும்.
- மாணவர்களின் உடல், மன மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை சமநிலையாக ஊக்குவிக்கும்.
- பாரம்பரிய கலைக் கல்வியை உலகளாவிய கல்விச் சூழலில் அங்கீகரிக்கப்படக்கூடிய அகாடமிக் வடிவமாக மாற்றும்.
- நாட்டியக் கற்பித்தல் முறைகளில் தரநிலை உயர்வு ஏற்படும்.
- ஆசிரியர் பயிற்சி திட்டங்களுக்கு அறிவியல் அடிப்படைகிடைக்கும்.
- மாணவர் மதிப்பீட்டு முறைகள் சீரமைக்கப்படும்.
- பாரம்பரிய கலைக் கல்வி பாதுகாக்கப்பட்டு, நவீன சூழலுக்கு ஏற்ப மேம்படுத்தப்படும்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)
tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**கருதுகோள்**

குரு–சிஷ்ய மரபின் அடிப்படையில் உருவாக்கப்படும் ஒருங்கிணைந்த ஆடலாக்க மாதிரி, நாட்டியக் கல்வியின் கற்றல்–கற்பித்தல் செயல்முறைகளை மேம்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன், ஒழுக்கம் மற்றும் மேடை ஆளுமையை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தும்.

**ஆய்வு பிரச்சினை**

நவீன கல்விச் சூழலில், நாட்டியக் கல்வி பெரும்பாலும் குறுகிய காலப் பயிற்சி முறைகளுக்கும், தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் வழிமுறைகளுக்கும் உட்பட்டு வருகிறது. இதன் விளைவாக, பாரம்பரிய குரு–சிஷ்ய உறவின் ஆழமான கல்வியியல் மற்றும் பண்பாட்டு மதிப்புகள் மங்கிப்போவது கணிசமாகக் காணப்படுகிறது.

**குருவின் இலட்ணசமும் , அவசியமும்**

மாணவர்க்கு குரு என்பது ஆசிரியர் என்ற பொருளையும் மீறிய மிகப் புனிதமானதொரு சொல். இச்சொல் மிகுந்த மதிப்பு வாய்ந்ததாகும். ஒரு மாணவனுக்கு குரு என்பவர்தான் கல்வி அல்லது கலை ஆகும். குருவிற்கு மாணவர் என்பவர் அந்தக் கலையை தொடரச் செய்யும் சங்கிலி போன்றவர். குரு இல்லாமல் கற்கும் கல்வி வெறும் விடயங்களை மற்றும் அறியும் வண்ணம் அமையும், ஒரு உயிரற்ற ஒரு நிலையாகும். குரு மூலம் கற்கும் கல்வியே உயிர் உள்ள அறிவினைத்தரும் வாழ்வை மேம்படுத்தும் அது மட்டுமல்ல குருவின் நல்லாசியுடன் கற்கும் கல்வியே பயனுள்ளதாக மிளிரும். இதற்கு நல்ல உதாரணமாக ஏகலைவன் கதையைக் கூறலாம்.

மகாபாரதத்தில் வரும் ஏகலைவன் என்னும் வேடுவன் வில் வித்தை கற்கும் பேராசையில் துரோணரிடம் சென்றான். ஆனால் துரோணர் அவனுக்குக் கற்றுத்தர மறுத்துவிட்டார். துரோணர் தன்னைச்சீடனாக ஏற்று வில் வித்தை கற்றுத்தர மறுத்ததினால் மனமுடைந்த ஏகலைவன், துரோணர் போன்று ஒரு சிலையைச் செய்து முன்னிறுத்தி, வழிபட்டு விற் பயிற்சி பெற்றான். ஏகலைவனின் திறமையையும் சிறப்பினையும் கேள்விப்பட்டு, அவனைக் காண வந்தார் கண்டு வியந்து யார் உனது குரு எனக் கேட்க, குருவே! தாங்கள் தான் என் ஆசிரியர் நான் உங்கள் உருவச்சிலையை முன்னிறுத்தித் தங்களைக் குருவாகப் பாவனை செய்து இக்கலையைக் கற்று வந்தேன் என்றான். பின் தன் மானசீக குருவின் விருப்பத்திற்கேற்பத் தனது கட்டை விரலை குருவுக்குக் காணிக்கையாக சமர்ப்பித்தான். குருவின் அனுமதி இல்லாது தானாகக் கலையினைக் கற்றதனால் அவன் மிகுந்த தேர்ச்சி அடைந்தும் அவன் கற்றகலை அவனுக்கே பயன்படாது போயிற்று. எனவே குருவை வணங்கி, அவர் கற்பிக்க, அவர் மூலம் கற்கும் கலையே ஒரு மாணவரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க உதவும் காரணியாகும். உதாரணமாக ஸ்ரீ கிருஷ்ணர் குரு சந்திப்பாணியின் காலடியில் வசிஷ்ட முனிவரிடம் கல்வி கற்றார்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

மாணவர்களின் குறைகளை அறிந்து அவைகளைக் களையக்கூடிய திறம் ஆசிரியருக்கு மட்டுமே உண்டு. எனவே குரு மாணவர்கட்கு மிகவும் இன்றியாமையாதவராகக் கருதப்படுகின்றார்.

நல்லதொரு குருவைத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம். தவறான குருவிடம் கற்க முயன்றால் வழிகாட்டுதல் தவறாகி மாணவரது வாழ்வே வீணாகிவிடும். மாணவர் வாழ்வு முழுமையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமைய நல்ல குரு அவசியம்.

**'குலனரு டெய்வங் கொள்கை மேன்மை கலைபயிறெளிவு**
**கட்டுரை வன்மை நிலமலை நிறைகோன் மலர்நிகள்**
**மாட்சியும் உலகிய லறிவோ டுயர்குண மினையவும்'**

என ஆசிரியர் இலக்கணத்தை பவணந்தி முனிவர் இயம்புகின்றார்.

**இதன் பொருள்**

நற்குடியில் பிறந்து இறைவழிபாடு உடையவராய் கற்றகலையில் நல்ல பயிற்சியும் தெளிவும் உடையவராய் மாணவர்கட்கு அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்தியம்பும் ஆற்றல் பெற்றவராய் நிலம் போல பொறுமையும் மலை போல உயர் நோக்கமும் துலாக்கோல் போல் சீர் தூக்கும் செம்மையும், மலர் போல குணமும் கொண்டவரே நல்லாசிரியர் ஆவார்.

பரதக்கலையைப் பொறுத்தவரை ஆசிரியருக்கு ராகம், தாளம், நூலறிவு இவை மிக முக்கியம். மாதவியின் ஆடல் ஆசிரியர் பற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகையில்,

'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து பலவகைக் கூத்தும் விலக்கினிற்புணர்த்துப் பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும் விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து'

(சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை-15) என்று குறிப்பிடுகின்றது. அகக்கூத்து, புறக்கூத்து என்ற இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்தும் அல்லியம் முதல் கொடுகொட்டி ஈறாக உள்ள பதினொரு வகை ஆடலும் அறிந்து அவை பாடல், தாளம் இவை தம்முள் ஒத்து இயங்குமாறு அமைக்கும் ஆற்றல் மிகுந்தவன் என்கின்றது.

சில ஆசிரியர்கள் நன்கு கற்றறிந்தவராக இருப்பர். ஆடற் கலையிலும் வல்லவராய் இருப்பர். ஆனால் பிறருக்குக் கற்றுத்தரும் வல்லமை பெற்றிரார். மாணவர் தகுதி அறிந்து கற்றுத்தரும் திறனும் அவருக்கு இருத்தல் வேண்டும். அவரது குணநலன்களை நான்கு பொருட்களுடன் ஒப்பிடுகிறார். அவையாவன

1. நிலம்

பெருமை, திண்மை, பொறுமை கொண்டவராய் பருவத்தில் பயன் தருபவர் ஆசிரியர். பெருமை,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

வல்லமை, பொறுமை கொண்டு மாணவர்களிடம் தக்க சமயங்களில் தகுந்தன கற்றுத் தருபவராய் இருத்தல் வேண்டும்.

2. மலை

'அளக்க லாகா அளவும் பொருளாற் துளக்க லாகா நிலையும் தோற்றமும் வறப்பினும் வளந்திடும் வண்மையும் மலைக்கே'

(நன்னூல் கண்டிகையுரை 28-பக்கம் 22)

அளக்கமுடியாத அளவும், பல பொருட்களைத் தன்னகத்தே கொண்டும் நிலையான தோற்றமும் கொண்டு வரண்ட காலத்திலும் வளம் தரும் மலை போல எக்காலத்திலும் மாணவர்க்குக் கற்றுத்தரல் வேண்டும் ஆசிரியர் என்போர்.

3. நிறைகோள்

எந்திரம் பொருளின் எடையை உணர்த்துவது போல விருப்பு வெறுப்பின்றி கூறவிழையும் கருத்தில் எந்த ஐயமும் இன்றித் தெளிவாய்க் கூறுபவர் ஆசிரியர்.

4. மலர்

மலர் போன்ற மென்மையும் மலர்ச்சியும் கொண்டவராய் ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

**கற்பித்தல் முறைக்கான தந்திரங்கள்**

நல்லாசிரியர் தான் கூறவேண்டிய கருத்துக்களை மனதில் நிறுத்தி வரிசைப்படுத்தி மாணவர்களின் தகுதி அறிந்து அவசரப்படாமல், கோபம் கொள்ளாமல் முக மலர்ச்சியுடன் மாணவர் மனதில் பதிய வைத்தல் வேண்டும். இதனை ஐந்து வகையான தத்திரங்கள் மூலம் வரையறை செய்துள்ளனர். ஆவையாவன,

1. மத்ஷய தந்திரம்
2. கூர்ம தந்திரம்
3. பிரமர தந்திரம்
4. மார்ஜார தந்திரம்
5. மார்கட தந்திரம்

1. மத்ஷய **தந்திரம்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam

முதலாவது வகையான மத்ஷய தந்திரத்தில் மீனானது எவ்வாறு தன் சினைகளை கண்களால் பார்த்தவுடனேயே அச்சினைகள் குஞ்சுகளாகித் தாய் மீனுடன் தொடர்ந்து சென்று நீந்துகின்றது. அவ்வாறே குருவானவர் மாணவர்களை கிருபையுடன் நோக்குவதனாலேயே ஞானத்தை கொடுப்பர். சிவபெருமானின் அம்சமான தட்சணாமூர்த்தியானவர் நிஷ்டையில் இருந்தவாறே முனிவர்களுக்கு மௌன உபதேசம் செய்து வேதங்களை அவர்களுக்கு உணர்த்தினார் என்று புராணங்கள் கூறுகின்றன. மத்ஷய தந்திரத்தை இந்நிகழ்வுகள் விளக்குகின்றன.

**2. கூர்ம தந்திரம்**

இரண்டாவது வகையான கற்பித்தல் உபாயம் கூர்ம தந்திரம் எனப்படும். ஆமையானது எவ்வாறு தனது முட்டைகளைத் தரையில் இட்ட பின் நீரினுள் மூழ்கிவிடினும் அதன் நினைவெல்லாம் அம்முட்டைகளின் மீதே இருக்கின்ற காரணத்தாலும் ஆமையின் மனோ வலிமையினாலும் முட்டைகள் குஞ்சாகித் தாயிடம் சேர்ந்து விடுகின்றன. அவ்வாறே ஆசிரியர் மாணவனை அன்புடன் பார்வையிட்டு ஆசீர்வதித்துத் தனது அன்பின் சக்தியினாலே மாணவனை உயர்த்தி விடுவார். இப்படிப்பட்ட ஆசிரியர் கூர்ம தந்திரத்தைக் கையாள்வார். இவர் எவ்வேளையும் மாணவர் நினைவாக இருப்பார்.

**3. பிரமர தந்திரம்**

மூன்றாவது வகையான கற்பித்தல் உபாயமாக விளங்குவது பிரமர தந்திரம் எனப்படும். குளவியானது எவ்வாறு எங்கோ இருக்கும் புழுவைக் கொண்டு வந்து தனது கூட்டில் வைத்து அடிக்கடி அதைக் கொட்டுவது போலப் பாசாங்கு செய்யும் அப்புழு பயத்தினால் குளவியின் நினைவாகவே இருந்து, ஈற்றில் குளவியின் உருவத்தை அடைகின்றது. அவ்வாறே அஞ்ஞானமென்னும் இருளில் மூழ்கிக் கிடக்கும் மாணவன் பொய்யாகத் தன்னைப் பயமுறுத்தும் ஆசிரியரின் எண்ணமாகவே இருந்து பின்னர் குருவின் வித்தையைப் பெற்று விடுவான். இப்பேர்ப்பட்ட ஆசிரியர்கள் பிரமர தந்திரம் நன்கறிந்தவர்களாகக் காணப்படுவர். இத்தந்திரத்தில் மாணவர் குருவின் ஞாபகமாவே இருப்பர்.

**4. மார்ஜார தந்திரம்**

நான்காவது வகையான தந்திரம் மார்ஜார தந்திரம் எனப்படும். இதில் பூனையானது எவ்வாறு தான் போட்ட குட்டிகளைத் தன் வாயினால் கவ்விப் பல இடங்களில் கொண்டு போய் வைத்துப் பாதுகாக்கிறதோ அவ்வாறே ஆசிரியரும், தன்னுடைய மாணவனுக்கு நல்ல பக்குவம் ஏற்படுகின்றவரையிலும் அவனைத் தன்னுடனே வைத்திருந்து பாதுகாத்து வித்தைகளைக் கற்பிக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக நாட்டியக்கலையில் நிலவிய குருகுலவாசம் என்னும் கல்வி முறையைக் குறிப்பிடலாம்.

**5. மார்கட தந்திரம்**

ஐந்தாவது வகையான தந்திரம் மார்கட தந்திரம் எனப்படும். இதில் தாய்க்குரங்கானது எவ்வாறு தன்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

குட்டிகளை வயிற்றில் கட்டிக்கொண்டிருந்தாலும் கவனியாது மரக்கிளைகளில் தாவிக் கொண்டிருப்பினும் உரிய காலத்தில் குட்டிகளுக்குப் பால் கொடுக்கத் தவறுவது இல்லை, அவ்வாறே மாணவன் எவ்வளவு தான் ஆசிரியரை அணுகித் தொண்டு செய்யினும் ஆசிரியர் அவனை அலட்சியம் செய்வது போல் நடித்துப் பின் உரிய காலத்தில் பக்குவமாகப் பாடங்களை உபதேசம் செய்வர், இப்பேர்ப்பட்ட ஆசிரியர்கள் மார்கட தந்திரத்தில் தோய்ந்தவர்கள் எனக் கருதப்படுவர்.

இவ்வைந்து வகையான தந்திர உபாயங்களை ஒரு ஆசிரியரே தனது மாணவரிடம் உபயோகித்து மாணவனின் பக்குவத்திற்கேற்றவாறு உபதேசம் செய்யலாம்.

**குருவிடம் வித்தையினை கற்க ஆரம்பிக்கும் முறை**

நாட்டியம் மற்றும் நுண்கலைகள் பயில்பவர் முதன்முதலாக ஒரு குருவிடம் சேரும் போது என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். நாட்டியம் பயில்பவர் குருவிடம் சேரும் போது சூனிய நாளான அமாவாசை, பஞ்சமி, தசமி, ஏகாதசி, சதுர்த்தி, பௌர்ணமி போன்ற திதிகளிலும் சதயம், மூலம், அஸ்வினி, திருவாதிரை, ரேவதி, கிருத்திகை, உத்தராடம், சுவாதி போன்ற நட்சத்திரங்களிலும், பிரதோஷ நாட்களின் பிரதோஷ காலத்தில் சுபமுகூர்த்த நேரத்திலும் நாட்டியத்தினை ஆரம்பிக்கலாம். இந்த ஆரம்ப பூஜையை மஞ்சள் விநாயகர் பிடித்து முடிந்ததும் தட்சிணாமூர்த்தி அல்லது நடராஜப் பெருமானுக்கு அர்ச்சனை (108 மந்திரம் சொல்லுதல்) செய்தல் வேண்டும். நாட்டியம் பயிற்றுவிக்கும் போது உபயோகப்படுத்துகின்ற தட்டுமனை மற்றும் தட்டுக்கழி (தட்டும் குச்சி) இவற்றை வைத்து மஞ்சளிட்டு குங்குமம் வைத்து சந்தனம் தூவி சிவன், விஷ்ணு, பிரம்மன் மூவரும் அதில் இருப்பதாகப் பாவித்து அதன் மீது பூவும் அட்சத்தையும் தூவி வணங்க வேண்டும். விநாயகர் பூஜை ஆரம்பிக்கும் போதே பதினொரு பட்டாடையுடைய ஒரு முழு நீளம் கொண்ட மஞ்சல் பூசிய நூல் கயிற்றில் கொன்றை, மல்லிகைர டையுடைய. செண்பகம், சாமந்தி போன்ற ஏதேனும் ஒரு மலரை நூலின் நடுப்பகுதியில் கட்டவேண்டும். இதனை விநாயகர் பூஜை செய்யும் போது மஞ்சள் விநாயகருக்கு முன்பாக வைக்கவேண்டும். கற்பூர ஆராத்தி முடிந்தவுடன் நாட்டிய ஆசிரியர் இந்த கங்கணம் எனப்படுகின்ற நூல் கயிற்றினை எடுத்து நாட்டியம் பயில வந்துள்ளவரை சீடராக ஏற்றுக்கொண்டு அவரது வலக்கை மணிக்கட்டில் கட்ட வேண்டும்.

அனுபவ பூர்வமாகச் சொல்லப் போனால், இந்தக் கங்கணம் மிகவும் சக்தி வாய்ந்தது எனலாம். மாணவர்கள் எல்லா நுண்கலைகள் பயிலும் போதும் கங்கணம் கட்டப்படல் வேண்டும். இவ்வாறு கட்டுவதால் வித்தை பயிலும் போது கங்கணத்தின் சக்தியால்யாவும் சிறப்பாக நடக்கும். அதாவது, திடசித்தமும், கிரகிக்கும் தன்மையும் உடல் நலமும் பாதியில் நிறுத்தாமல் கடைசி வரை இந்த வித்தையைப் பயில்வதற்கு கங்கணத்தின் சக்தியால் நடக்கும். கங்கணம் கட்டிய பின் குருதட்சணை



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

கொடுத்து காலில் விழுந்து வணங்கி ஆசி பெறவேண்டும். குரு தட்சணை அவரவர் தகுதிக்குத் தக்கபடி கொடுக்கலாம்.

மஞ்சள், குங்குமம், சிறிய பொட்டலம், மஞ்சள் பூசிய முகூர்த்த தேங்காய், பழவகைகள் கற்கண்டு, வெற்றிலை பாக்கு, வஸ்த்திரம் (வசதிக்கேற்ப) மேல்துண்டு, வேட்டி, சட்டை, பட்டுவஸ்திரம் ஆசானுக்கு கொடுத்தல் வேண்டும். குருதட்சணையில் பணமும் இடம் பெறுதல் வேண்டும். முற்காலத்தில் பொற்காசுகள் கொடுத்தனர். நாட்டியகுருவுக்கு நாட்டிய ஆரம்ப நாளன்று குருவுக்கு அளிக்கப்படுகின்ற காணிக்கையை குழந்தையின் தந்தையின் தந்தை அல்லது தாய்வழிப்பாட்டன் அளித்தால் வித்தை நன்றாக வரும் என்று கூறுவர். குழந்தையின் பாட்டனாரின் ஆசியும் பெற்றோரின் ஆசியும் பெறவேண்டும். குருவின் ஆசி பெற்றவுடன் வித்தையை ஆரம்பிக்க வேண்டும்.

பயிற்சி முடிந்து ஒரு மார்க்கம் (அலாரிப்பு தொடக்கம் தில்லானாவரை) அல்லது இரண்டு மார்க்கங்கள் முடிந்த பின் முதல் முறையாக அரங்கேறி ஆடுவதை. அரங்கேற்றம் என்று குறிக்கப்படும். அரங்கபிரவேசம் என்பது இதற்கு ஒத்த சமஸ்கிருதச் சொல் ஆகும். அரங்கேற்றத்திற்குத் தமிழர் எத்தனை முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதற்கு முழு அத்தியாயத்திற்கே அரங்கேற்றுக்காதை என்று பெயரிட்டதிலிருந்து விளங்கும். நல்ல அவைத் தலைவரும் ரசிகரும் உள்ள அரங்கில் முதல் அரங்கேற்றம் நல்ல நாளில் நடைபெற வேண்டும். அதற்கு முன் கஜ்ஜை பூஜை செய்வது என்று ஒரு மரபு இருந்தது. சலங்கையை முதல் முதலில் பூஜையில் வைத்துக் கட்டிக்கொள்ள வேண்டும். அரங்கேற்றம், அவையோருக்கு புதிய நடனக்கலைஞரை அறிமுகமாக்கும் விழா, அத்தோடு மாணவர் குருவிற்கும் பக்கவாத்திய கலைஞர்களுக்கும் தன் மரியாதையை உணர்த்தும் வகையில் புத்தாடைகளும், பொன்னும் வழங்கி வணங்க வேண்டிய விழாவாகும். அரங்கேற்றம் என்பது கலை வாழ்வின் புனிதமான தொடக்கமாகும். இந்நிகழ்வுகளின் தொடக்கத்தில் ஆராதனையின்றி நிகழ்த்தக்கூடாது. ஆகவே முதல் நல்ல வாக்கும், மனமும், மாமலராள் நோக்கும் பெற்று நோயற்ற வாழ்வை அருளும் தும்பிக்கையான் பாதம் பணிந்து, பிறகு தோடைய மங்கலம், மேளப்பிராப்தி போன்ற பூர்வாங்க விதிகளைக் கையாண்டு குருவையும் வணங்கி நர்த்தகி ஆடத் தொடங்க வேண்டும். ஆடுகின்ற அரங்கத்தை ஆலயமாக மட்டுமின்றி அரங்க தேவதையாக உருவகப்படுத்தி, அரங்க தேவியை ஆராதிக்க வேண்டும். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் ஒரு பரசுகுல பாக்கியமே பாவரஸா னந்தத்து உருவாய் எழுந்த ஒளியே - மருவுகன் மோகனமே இன்பமுதலே அரங்கநிலை ஆகவந்த அம்மை என்ன ஆள் இதுவே சமஸ்கிருதத்தில் கீழ்கண்டவாறு கூறப்படுகிறது.

‘பரதகுல பாக்ய கலிகே பாவரஸானந்த பரிணதாகாரே ஜகதேக
மோகன கலே ஜயஜயரங்காதி தேவதே தேவி’

என்று மகாபாரத சூடாமணி கூறுகின்றது. அத்தோடு நல்ல சபைத் தலைவரும் நல்ல ரசிகரும் அமைந்தால் வித்தை கற்று அரங்கேறும் மாணவியின் வித்தை நிறைவு பெறும். சபைத் தலைமை



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

தாங்குபவர் நல்ல குணமுடையவராகவும், கலா சோதனை கலையில் வல்லமை, தயவு, சத்தியவாக்கு, பொறுமை, காமனை ஒத்த அழகு ஆகியவையும் பொறாமை அற்றவராகவும் இருத்தல் அவசியம். நல்ல கலையை ரசிக்கக்கூடிய ரசிகர்களும் அமைந்தால் அரங்கேற்றம் காணும் மாணவியர் பெருமை அடையமுடியும்.

**நாட்டிய ஆசிரியரின் கடமையும் பொறுப்பும்**

1. பாடங்களை நன்றாகத் தயார் செய்து மாணவர்களுக்கு முறையாகக் கற்பிக்க வேண்டும். வகுப்பில் மாணவர்கள் அன்றாடம் எழுப்பும் வினாக்களுக்குப் பதிலளிக்கத் தக்கதாக தன்னைத் தயார் படுத்தி இருக்க வேண்டும்.
2. பாடக் குறிப்புக்களைத் தயார் செய்து கொண்டு வகுப்பறைக்குச் செல்ல வேண்டும். தான் கற்றுக்கொடுக்கும் உருப்படியை மாணவர் ஏற்றுக்கொள்ளும் விதம், அங்கீகாரம் முதலியவற்றை அறிய வேண்டும்.
3. தன் நிதானத்தை எந்த நேரத்திலும் இழக்காமல் பொறுமையாக இருக்கவேண்டும். ஆசிரியர் புன்னகையுடன் வருகை தந்து மாணவர்களுடன் சிரித்தமுகத்துடன் பழக வேண்டும்.
4. மாணவர்களின் மத்தியில் நல்லொழுக்கத்தையும் சுறுசுறுப்பையும் உருவாக்க வேண்டும். மாணவரின் ஆற்றல் கிரகிக்கும் தன்மை ஆகியவற்றை அறிந்து அவற்றுக்கேற்றபடி கற்பித்தல் வேண்டும்.
5. நாட்டிய ஆசிரியர் நாட்டியக் கச்சேரி, நாட்டிய நிகழ்ச்சி ஆகியவற்றிற்கு மாணவர்களை அழைத்துச் சென்று காட்ட வேண்டும். ஆசிரியர் மாணவருக்குத் தன்னம்பிக்கை ஊட்டுபவராக இருக்க வேண்டும்.
6. நாட்டிய ஆசிரியர் நடன உருப்படிகளை ஞாபக சக்தியிலிருந்தே கற்றுக்கொடுக்க வேண்டும். ஆசிரியர் அந்தந்த வகுப்பிற்கு ஏற்பப் பாடங்களை ஆலோசித்துத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
7. நாட்டிய வகுப்பறையைப் புகழ் வாய்ந்த நர்த்தகிகளின் படம், சிற்பம், ஓவியம், நடனம் அத்தியாவசியமான சாஸ்திர அட்டவணை ஆகியவற்றால் அலங்கரிக்கலாம்.
8. நாட்டிய ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் பூரண புரிந்துணர்வு இருக்க வேண்டும். நாட்டிய ஆசான் மாணவரின் ஆற்றலை சரியாக நிர்ணயிக்கத் தெரிய வேண்டும்.
9. மாணவர்களை வழி நடத்தி சிறந்த கலைஞர்களாக்க ஆசிரியர் ஆரோக்கியமான உடலை பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் நாட்டிய நுணுக்கங்களைத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
10. நடன ஆசிரியர் அடவு வகைகளிலும் அபிநயத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர் தான் எடுத்துக்கொண்ட உருப்படியை அப்பியாசித்து சரியான முறையில் தெளிவாகவும், நேர்த்தியாகவும் கற்றுக் கொடுக்கத் தெரிய வேண்டும்.
11. இதர நாட்டிய ஆசிரியர்கள், கலைஞர்கள் ஆகியோரைப் பற்றி அவதூறாகப் பேசும் பழக்கம்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

இருக்கக்கூடாது. ஆசிரியர் சமூகத்தில் நல்ல ஒழுக்கம் உடையாவராக இருத்தல் வேண்டும்.

12. நாட்டிய ஆசிரியர் பொதுத் தன்மையுடையவராகவும், பக்க சார்பற்றவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழவேண்டும்.

இவ்வகை முயற்சியினால் ஆசிரியர் தன் கடமையைச் செவ்வனே செய்து முடிக்கலாம்.

**மாணவர்களைப் பரீட்சித்தல்**

1. தாளம் போடாமல் தீரிமானத்தைக் கூறி அது எங்கு, எந்த எடுப்பில் ஆரம்பிக்கின்றது. என்று மாணவரிடம் கண்டுபிடிக்குமாறு கேட்டல் வேண்டும்.
2. ஆசிரியர் பல விதமான தாளங்களை மாணவருக்குப் போட்டுக்காட்டி அவற்றின் ஜாதி. ஐதி, பேதங்களை கண்டு பிடிக்க வைத்தல்.
3. மாணவர்கள் எந்த எடுப்பில் எடுக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் கண்டுபிடித்தல். மண்டலங்களின் சேர்க்கை மூலம் அடவுகளை அமைக்கப்பண்ணுதல்.
4. பொருத்தமான அடவுகளின் சேர்க்கையினால் கோர்வைகள் அமைத்தல், சொற்கட்டுகளைத் தாளத்துக்கு ஏற்ப அமைத்தல், ஆசிரியர் அபிநயிக்கும் போது என்ன ராகம் எனக்கண்டு பிடித்தல்.
5. மாணவர்களிடம் சொற்கட்டுகளைத் தாளத்திற்கு ஏற்ப அமைக்கும்படி கேட்டல். கொடுக்கப்பட்ட பாடல்களுக்குப் பாவம் பிடித்து பின் சஞ்சாரி பாவம் செய்வித்தல், இன்ன தாளத்தில் இத்தனை ஆவர்த்தனத்தில் கோர்வை அமைக்கச்செய்தல்.

இவற்றினுடாக மாணவர்களின் நுண் அறிவைப் பரீட்சித்து அவர்களைத் திறமைசாலிகளாக்குவது ஆசிரியரின் கடமை ஆகும்.

இவைகளில் இருந்து தவறும் ஆசிரியர் அதாவது ஆசிரியர் ஆகத்தாகதவர் எனும் தகைமையை பெறுகின்றனர். அவர்களை நாலு பொருட்களுக்கு ஒப்பிடலாம்.

மொழிகுணாமின்மையும் இழிகுண வியல்பும் அழுக்கா
றவாவஞ்சம் மச்ச மாடலுங் கழற்குடம், மற்பானை பருத்திக் குண்டிகை முடத்தெங் கொப்பான
முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியராகு தாலே

நல்லாசிரியர் ஆகாதவர் கற்பிக்கும் முறை நாலு பொருட்களுடன் ஒப்பிடப்படுகிறது.

1. கழற்குடம்:

பெய்த முறையன்றிப் பிறழ உடன் தரும் செய்தி

கழற் பெய் குடத்தின் சீரே.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ஒரு குடத்தில் கழற்காய்களைப் போட்டால் அவை கீழ் மேலாகப் பிறழ்ந்துவிடும். அதுபோல முதல் கூறவேண்டியதைப் பின்னரும், பின்னர் கூறவேண்டியதை முதலும் என முறைமாற்றிக் கூறுபவர்கள் ஆவர்.பரத நாட்டியத்தில் தஞ்சை நால்வர் மரபு வழியை ஏற்படுத்தி உள்ளனர். அடவு, அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, என்ற முறையில் கற்றுத் தருவதே சிறப்பு என்று தெரிவித்துள்ளனர்.

2. மடற்பனை

தானே தரக்கொளி னன்றித் தன்பான் மேவிக்

கௌக் கொடா விடத்தது மடற்பனை.

மடற்பனையின் கனியை யாரும் பறிக்க முடியாது. தானாகவே கொடுத்தால் தான் உண்டு. அது போல் சில ஆசிரியர்கள் அவர்கள் விரும்பும் போது மட்டுமே கற்றுத் தருவர். மாணவர்கள் விரும்பிக் கேட்டால் கற்றுத் தரமாட்டார்.

3. பருத்தி மூட்டை

பருத்தி மூட்டைக்குள் பஞ்சினைச் திறந்து சிறிது சிறிதாகத் தான் போடமுடியும், சிறிது சிறிதாகத்தான் எடுக்க முடியும். அது போல் சிலர் தாம் சுற்றறிந்ததும் குறைவு சுற்றுக்கொடுத்தலும் குறைவு என்றிருப்பர்.

4. முடத்தெங்கு

தன்னை வளர்த்தவர்க்குப் பயன் தராமல் வேறு எவர்க்கேனும் பயன் தரும் முடத்தெங்கு போல் தாங்கள் வழிகாட்டி உதவும் மாணவர்களுக்கு கற்றுத்தராமல் வேறு எவர்க்கேனும் கற்றுத்தருவர். மற்ற நடனப் பள்ளிகளைக் குறை கூறுவதும், தாம் கற்றுக் கொடுக்கும் நடனப்பாணிதான் சிறந்தது என்று நினைக்கும் ஆசிரியர்களும், தன்னைவிடச் சிறந்த மாணவர்களின் முன்னேற்றம் கண்டு பொறாமை கொள்ளும் ஆசிரியர்களும் நல்ல ஆசிரியர் ஆகமாட்டார். இது நடன உலகிற்கு ஆரோக்கியமானதன்று.

**சிஷ்ய இலட்சணம் (மாணவர்)**

மாணவர்களை அவர்கள் கற்றுக்கொள்ளும் தன்மைக்கு ஏற்ப மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தலை மாணாக்கர்
2. இடை மாணாக்கர்
3. கடை மாணாக்கர்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

1. தலை மாணாக்கர்

இவர்களுக்கு உதாரணம் அன்னம், பசு ஆகும். அன்னம் பாலையும் நீரையும் வேறு வேறாக பிரிக்கும் தன்மை கொண்டது. அதுபோல தலை மாணாக்கன் நன்மை, தீமை இரண்டையும் பிரித்தறியும் குணம் கொண்டவன். பசு அசை போடும் தன்மையை கொண்டது. அதேபோல கற்ற கல்வியை நினைவிற்குக் கொண்டு வந்து மனனம் செய்பவன் தலை மாணாக்கன் ஆவான்.

2. இடை மாணாக்கர்

இவர்களுக்கு உதாரணம் மண் நிலமானது, அதில் இடப்பட்ட உரத்திற்கு ஏற்பப்பலன் தரும். அது போல ஆசிரியர் கற்றுத் தந்ததற்கேற்ப மட்டுமே அறிவு பெறுபவள் இடை மாணாக்கன் ஆவான்.

3. கடை மாணாக்கர்

இவர்களுக்கு உதாரணம் ஓட்டைக் குடம். பெய்த நீரை எல்லாம் இழந்துவிடும். ஆடு இது நுனிப்புல் மேயும். எருமை குட்டையைக் குழப்பும். நெய்யரி (வடிதட்டு) நல்லவனவற்றைக் கீழே விட்டுத் தேவையற்றதைத் தன்னிடம் தக்க வைத்துக்கொள்ளும். இவை போல கற்றது எதுவும் மனதில் நிற்காதவனும், ஆழப்படிக்கத் தெரியாதவனும், குழப்பம் கொள்பவனும், தேவையற்றதைக் கற்கும் மாணாக்கன் எனப்படுவான்.

**குரு சிஷ்ய உறவு**

குரு சிஷ்ய உறவு என்பது மிகவும் நெருக்கமான, வாத்ஸல்யமான ஒன்று. எனினும் அதற்கு ஓர் எல்லை உண்டு. முன்பே குறிப்பிட்டது போல தான் பரம்பரையாகக் கற்று வந்த கலையைத் தனக்குப்பின் தொடரும் மாணவன், சங்கிலித் தொடரின் ஓர் அங்கமாகின்றான். முற்காலத்தில் மாணவர்கள் குருகுலவாசம் மூலம் கலைகளைப் பயின்றனர். அவர்கள் குருவுடனேயே தங்கியிருந்து குருவிற்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கலைகளைப் பயின்று வந்தனர். பெரும் மன்னன் மகனாயினும் சரி. சாதாரண ஏழைக் குடிமகனாயினும் சரி. குருவைத் தேடிச் சென்று, அவருடன் வாழ்ந்து, அவருக்குப் பணிவிடை செய்தே கலைகளைக் கற்று வந்தனர். இத்தகைய குருகுலவாச முறையில் கற்றுத் தெளியும் சிஷ்யன் இளமையில் கல் என்னும் முதுமொழிக்கு ஏற்ப அந்தக்கால கட்டத்தில் அவர்களின் வாழ்வு குருவின் வாழ்வுடன் இணைந்தே இருந்ததனால் எழுத்தறிவு மட்டுமின்றி வாழ்வின் நெறிமுறைகள், ஒழுக்கம், சீலம் ஆகியவைகளையும் இணைந்தே அவர்களின் கல்வி அமைந்தது. அதனால் அக்கல்வி அவர்களின் வாழ்நாள் முழுமைக்கும் துணை நின்றது. எத்தனை சோதனைகள், இடர்கள், வரினும் எதிர்த்துப் போரிடவும், வெற்றி கொள்ளவும் பக்கபலமாய் அமைந்து அக்கல்வி உதவி புரிந்தது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

ஆசிரியர், மாணவர் உறவு பற்றி பண்டைய இலக்கண நூலாம் நன்னூல் பின்வருமாறு கூறுகின்றது.

அழ னீங்கா னணுகா னஞ்சி நிழ னீங்கா னிறைந்த
நெஞ்சமோ எடத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாய் படர்ச்சி வழிபாடே.

அதாவது, நெருப்பின் முன்பு அமர்ந்து தீக்காய்பவன் தீயிலிருந்து விலகியும் இருத்தல் கூடாது, மிக நெருக்கமாகவும் இருத்தல் கூடாது. அது போல மாணவன் ஆசிரியரிடம் மிகவும் நெருக்கமாகவும் இருத்தல் கூடாது, அதிகம் விலகியும் இருத்தல் கூடாது. நிழல் போலக் குருவைத் தொடர வேண்டும். அன்பு நிறைந்த நெஞ்சமோடு அவர் விருப்பப்படி நடந்து அறநெறியோடு வழிபாடு செய்ய வேண்டும் என்பதே இதன் பொருள் ஆகும்.

இவ்விதம் ஆசிரியரோடு வாழும் மாணவன் குருவின் அறிவுடன் அவரது அனுபவத்தையும் சேர்த்தே பெறுகின்றான். இதனால் படிப்பறிவும், பட்டறிவும் சேர்ந்தே எதிர் காலத்தில் சிறந்த ஆசானாக ஆகும் நிலைக்குத் தன்னை தயார் படுத்திக்கொள்கின்றான். ஒரு மாணவனின் எதிர்கால வாழ்வே நல்லாசிரியர் கையில் தான் அமைந்துள்ளது. ஆகவே ஆசிரியரின் கடமையும், பொறுப்பும் அளவிடற்கரியன.

புலம் பெயர்ந்த நாடுகளில் பரதக்கலையை கற்பிக்கும் போது ஆசிரியர்கள் எவ்வகையில் கற்பிக்கிறார்கள் என்பதை நோக்குவோம்.

இயந்திரமயமான வெளிநாட்டுச் சூழல், இரட்டைக் கலாச்சாரப் புறச் சூழல், வாழும் மக்களின் வாழ்க்கை முறையில் எம் கலையை பயிற்றுவிப்பது என்பது மிகவும் பாராட்டிற்கு உரியது. எல்லா மாணவர்களும் வாழும் மொழியை கற்கும் வேளையில் எம் புராதனக் கலையான பரதம் போன்ற நுண்கலைகளைக் கற்கும் முயற்சி பாராட்டிற்குரியது. ஆயினும் இங்கு உள்ள எல்லா ஆசிரியர்களும் பரதக்கலையின் இலக்கணங்களுக்கு அமைய கற்பிக்கின்றார்களா? என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் எழும் ஒன்றே. ஆயினும் எம்தொன்மைக்காலக் கலைகளை ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் கற்பிக்கும் ஆசிரியர்களும் உள்ளனர் என்னும் போது மனதுக்கு நிறைவளிக்கின்றது. குரு லட்சணத்தில் குறிப்பிட்ட இலக்கண மரபு வழுவாமல் கற்பிக்கும் நடனப்பள்ளிகளும் உள்ளன. வெளிநாடுகளில் கற்பிக்கும் முறைகளில் குருவின் அர்ப்பணிப்பும் மாணவர்களின் ஈடுபாடும் மிகவும் இன்றியமையாதனவாகும். நேரத்துக்குப் போராட வேண்டிய நிலையிலுள்ள எம் சிறார்கள் மிகுந்த ஆர்வத்துடன் பரதம் கற்சு முயல்வது மிகவும் வரவேற்கப்பட வேண்டியது. அப்படி ஆர்வமாகக் கற்க வரும் மாணவர்களை நல்ல ஆசிரியரின் இலக்கணங்களுக்கு அமைய கற்பித்தல் எமது பாரம்பரியக் கலை மேலும் வளர வழி வகுக்கும்.

நாட்டியக் கலையைக் கற்கும் மாணவர்கள் தமது குருவை மிகவும் மதித்து நல்ல மாணவருக்குரிய இலட்சணத்துடன் பயின்று வரவேண்டும். எமது சிறார்கள் மொழியறிவும் விளக்கங்களும்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களின் சிரமங்களைப் புரிந்து கொண்டு ஆசிரியர்கள் அவர்கள் தாய் மொழியிலும் வாழும் நாடுகளின் மொழியிலும் விளக்கங்களைக் கூறுவதன் மூலம் இலகுவில் பொருள் விளங்கி கலையைக் கற்க முடியும். அவர்களின் நேரத்தை மனதில் கொண்டு அதன் மரபு மீறப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தொலைக்காட்சியில் நடனங்களைப் பார்த்துக் கற்றல் முதலியவற்றை தவிர்த்தல் வேண்டும். அது மாணவர் குருவின் உறவை பாதிக்கும் செயல் பாடாகும். ஆகவே குரு கற்பித்தல் முறையில் இலக்கண மரபு மாறாமல் கற்பிக்க வேண்டும். மாணவர் பணிவோடு, மாணவர் இலக்கண மரபு மாறாமல் கற்க வேண்டும். இத்தகைய உறவு முறை ஒரு சங்கிலித் தொடர் உருவாக வழிவகுக்கும்.

**முடிவுரை**

இந்த ஆய்வு குரு–சிஷ்யர் உறவின் மற்றும் பாரம்பரிய கற்பித்தல் தந்திரங்களின் முக்கியத்துவத்தை, மாணவர்களின் அறிவு மற்றும் பண்பாற்றலை உருவாக்கும் விதத்தை வெளிப்படுத்துகிறது. குருவின் பண்புகள் மற்றும் கடமைகள், சிஷ்யரின் இலட்சணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம், பாரம்பரியக் கல்வி அறிவியல், ஒழுக்கம், ஆன்மீகம் மற்றும் பண்பாட்டு பரிமாணங்களை ஒருங்கிணைக்கின்றது என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது. முக்கியமாக, பரதநாட்டிய போன்ற கலைகள் கற்றுத்தல் மற்றும் ஒழுக்கத்தின் தொடர்பை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் குருவின் வழிகாட்டல் அறிவு பரிமாற்றத்தையே அல்லாமல், மாணவர் முழுமையான வளர்ச்சிக்கும், பண்பாட்டு மரபைப் பாதுகாப்பதற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. சமூக மற்றும் கல்வியியல் பகுப்பாய்வின் மூலம் குரு–சிஷ்யர் உறவு இன்றைய சூழலிலும் மிகவும் பொருத்தமானது என்பதை உறுதி செய்யிறது, இது வழிகாட்டுதல், பண்பாட்டுப் படிப்புத்தன்மை மற்றும் பாரம்பரிய அறிவை தொடர்வதில் உதவுகிறது.

முடிவாக, குரு–சிஷ்யர் முறை முழுமையான கல்வியியல் அமைப்பாக இருக்கும், இது நன்கு வளர்ந்த, பண்பாட்டு விழிப்புணர்வுடைய மற்றும் சமூக பொறுப்புணர்வுடைய நபர்களை உருவாக்கி, பாரம்பரியக் கல்வி முறைகளையும் நவீனக் கற்றல் முறைகளையும் இணைக்கிறது.

**உஷாத்துணை நூல்பட்டியல்**

[1]. அகத்தியர். குரு–சிஷ்ய மரபும் கல்வி வழிகாட்டலும். திருச்சி: தமிழ்மொழி பதிப்பகம், 2018.

[2]. மணிமேகலை, எச். பாரம்பரிய கல்வி சிந்தனைகள். சென்னை: கல்வியியல் பதிப்பகம், 2016.

[3]. நாராயணன், ஜி. இந்தியக் கல்வி மற்றும் பண்பாட்டு மரபு. மதுரை: நூற்பதி பதிப்பகம், 2019.

[4]. வெங்கடேஸன், டி. பாரம்பரிய கலைகளின் கலை மற்றும் கல்வி. கோயம்புத்தூர்:



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

கலைவிழா பதிப்பகம், 2017.

[5]. குமரன், என். குருவின் பண்புகள் மற்றும் சிஷ்ய வளர்ச்சி. திருநெல்வேலி: அறிஞர் பதிப்பகம், 2021.

[6]. ராமச்சந்திரன், எஸ். குரு–சிஷ்யர் உறவு மற்றும் பாரம்பரியக் கல்வி. தமிழ்ப் பதிப்பகம், 2015.

[7]. 7. கோவிந்தசாமி, பி. இந்தியக் கல்வி மரபுகள். தமிழ்நாடு பல்கலைக்கழகம், 2010.

[8]. சண்முகபாபு, டி. “பாரம்பரியக் கல்வி பெறுமதிகள்.” இந்தியகல்வி மரபுகள், தொகுத்தவர் எம்.பாலசுப்ரமணியம், கல்வி பதிப்பகம், 2018.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*

Tamilmanam